பக்கங்கள் 16 + 05

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆனி 25 செவ்வாய்க்கிழமை 09.07.2024 அதிர்வு 344

## 2 ஆம் நாளாகவும் தொடர்ந்த தொழிற்சங்கப் போராட்டம்!

### பாடசாலைகளும் முடக்கம்

(ஆ.ரமேஸ்)

நாடளாவிய ரீதியில் 200 இற்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் முன்னெடுக்கும் சுகவீன விடுமுறைப் போராட்டம் இன்று செவ்வாய்க்கிழமை 04





# கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவராக ரெலோவின் தலைவர் செல்வத்தைத் தெரிவு செய்க!

### ஆதரவு கோரி தமிழரசு, புளொட்டுக்கு ஜனா கடிதம்

“தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவராகத் தெரிவு செய்வதற்கு உங்களுடைய ஒத்துழைப்பையும், ஆதரவையும் வழங்குமாறு அன்புடன் வேண்டி நிற் கின்றோம்.” - என்று இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணிக்கும் (புளொட்) ரெலோவின் செயலாளர் நாயகம் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) எம்.பி. கடிதம் அனுப்பியுள்ளார். 04








# அலி சப்ரி ரஹீம் எம்.பிக்குப் பிடியாணை

புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமை உடனடியாகக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு புத்தளம் மேலதிக மாவட்ட நீதிபதியும் நீதிவானுமான அயோனா விமலரத்ன இன்று பிடியாணை பிறப்பித்துள்ளார்.

கற்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருஞ்சாம்பிட்டிய பகுதியில் உள்ள அரச சார்பற்ற நிறுவனமொன்றுக்குச் சொந்தமான கட்டடமொன்றுக்குள் அத்துமீறி நுழைந்து சொத்துக்களைச் சேதப்படுத்திய குற்றச் சாட்டின் பேரில் அலி சப்ரி ரஹீமுக்கு 04



உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally



## தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட

# நாடாளுமன்ற உறுப்பினராக குகதாசன் சத்தியப்பிரமாணம்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக கதிரவேலு சண்முகம் குகதாசன் இன்று சபாநாயகர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

நாடாளுமன்றம் இன்று முற்பகல் 9.30 மணிக்குச் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. இதன்போதே அவர் உறுதியேற்றார்.

சபாநாயகர் முன்னிலையில் இன்று அவர் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டதன் பின்னர் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர முன்னிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஏட்டிலும் அவர் கையொப்பமிட்டார்.



திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தனுடைய இழப்பை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்காக விருப்பு வாக்கின் அடிப்படையில் இரண்டாவது நிலையில் இருக்கின்ற கதிரவேலு சண்முகம் குகதாசன் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கதிரவேலு சண்முகம் குகதாசன் கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் இந்தியாவின் மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் உயர் கல்வியைப் பெற்றுள்ளார்.

1975ஆம் ஆண்டு முதல் இலங்கைத் தமிழரசுக் கட்சியில் உறுப்பினராக இருந்து 2018 ஆம் ஆண்டு முதல் கட்சியின் திருகோணமலை மாவட்டத் தலைவராகப் பணியாற்றி வருகின்றார். தேசிய கொள்கை, பொருளாதார விவகாரங்கள் மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் கீழ் கிழக்கு மாகாண அபிவிருத்தி அலுவல்கள் இணைப்பாளராகவும் அவர் பணியாற்றியுள்ளார்.

மேலும், 2020 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் திருகோணமலை மாவட்டத்திலிருந்து அவர் போட்டியிட்டிருந்தார்.












# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் புதிய பதில் வைத்திய அத்தியட்சகராக ரஜீவ்

(எஸ்.நிதர்ஷன்)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் புதிய பதில் வைத்திய அத்தியட்சகராக வைத்தியர் கோபாலமூர்த்தி ரஜீவ் இன்று கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

சுகாதார அமைச்சின் கடிதத்துக்கமைய வைத்தியசாலையில் இன்று நடைபெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் சமன் பத்திரண, யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் முன்னிலையில் புதிய பதில் வைத்திய அத்தியட்சகர் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பதில் வைத்திய அத்தியட்சகராக இருந்த இராமநாதன் அர்ச்சுனாவை மாற்றக் கோரி அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், பதில் வைத்திய அத்தியட்சகருக்கு ஆதரவாக தென்மராட்சி பொது அமைப்புக்கள் மற்றும் பொது மக்களின் ஏற்பாட்டில் நேற்று பாரிய போராட்டம் நடத்தப்பட்ட நிலையில், பதில் வைத்திய அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனா சுகவீன விடுமுறை எனத் தெரிவித்து கொழும்புக்குச் சென்றமை குறிப்பிடத்தக்கது.












## முகத்தில் இரத்தக் காயங்களுடன்

# இறப்பர் தோட்டத்தின் நடுவே சடலமாக மீட்கப்பட்ட மாணவி

முகத்தில் இரத்தக் கறையுடன் சந்தேகத்துக்கிடமான முறையில் இறந்து கிடந்த 16 வயது சிறுமியின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

ரத்னபுர, நிவித்திகல இறப்பர் தோட்டத்துக்கு அருகில் உள்ள நடைபாதையில் இருந்து நேற்று சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

16 வயதுடைய பாடசாலை மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் வடாபொத, யோவுன் கிராமம் பகுதியில் வசித்து வந்துள்ளார்.

இறந்தவரின் தாயார் வடாபொத கோயிலுக்கு அருகில் கடை நடத்தி வருவதோடு, சம்பவ தினத்தன்று மாணவி பாடசாலைக்குச் செல்லாததால் வீட்டில் தனியாக இருந்துள்ளார்.

இதையடுத்து அந்த மாணவியைக் கடைக்கு வருமாறு தாய் தொலைபேசி அழைப்பொன்றை வழங்கியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடைக்குச் செல்வதில் தாமதம் ஏற்பட்டதால், கடையில் இருந்து வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த தாய், இறப்பர் தோட்டத்தின் நடுவில் உள்ள நடைபாதையில் சென்று கொண்டிருந்தபோது, சந்தேகத்துக்குரிய வகையில் சிறுமியின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நிவித்திகல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### கூட்டமைப்பின்...

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் செயலாளர் ப.சத்தியலிங்கம், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (புளொட்) தலைவர் த.சித்தார்த்தன் ஆகியோருக்கு ரெலோவின் செயலாளர் நாயகம் தனித் தனியே கடிதங்களை இன்று அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"முதலாவதாக மறைந்த இரா.சம்பந்தன் ஐயாவுக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவிப்பதோடு, கடந்த 23 வருடங்களாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவராக எங்கள் எல்லோராலும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டு இரா.சம்பந்தன் ஐயா செயற்பட்டு வந்தார். தற்போது அவரது மறைவுக்குப் பின்பு புதிதாக நாடாளுமன்றக் குழுத் தலைவர் ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளுள் கடந்த காலங்களில் பல உள்வீட்டுப் பிரச்சினைகள், மனவேதனைகள் வந்த போதும் நாங்கள் நாடாளுமன்றத்தினுள் எமது மக்களின் தேவை, நன்மை கருதி ஒற்றுமையாகத்தான் செயற்பட்டு வந்தோம். அந்த அடிப்படையில் தொடர்ந்தும் ஒற்றுமையாக நாடாளுமன்றத்தினுள் செயற்பட விரும்புகின்றோம்.

எனவே, ஏற்பட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவருக்கான வெற்றிடத்தை எல்லோருடைய சம்மதத்துடனும் நிரப்புவதற்கு விரும்புகின்றோம்.

நாடாளுமன்ற சிரேஷ்ட தன்மை மற்றும் நீண்டகாலமாக, தொடர்ச்சியாக நாடாளுமன்றத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாவதற்கு முன்பிருந்தே, 26 வருடங்களுக்கு மேலாகப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவராகத் தெரிவு செய்வதற்கு உங்களுடைய ஒத்துழைப்பையும், ஆதரவையும் வழங்குமாறு அன்புடன் வேண்டி நிற்கின்றோம்." - என்றுள்ளது.

### 2 ஆம் நாளாகவும்...

இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.

இந்தப் போராட்டத்தில் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் சங்கத்தினரும் இணைந்துகொண்டனர். இதன் காரணமாக பாடசாலைகளில் வழமையான கல்வி நடவடிக்கை முற்றிலும் பாதிக்கப்பட்டது.

அதேநேரம் நாடளாவிய ரீதியில் பாடசாலைகளின் வழமையான கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனக் கல்வி அமைச்சு தெரிவித்திருந்த நிலையில் இன்று வழமை போல் பாடசாலைகளுக்குச் சென்ற மாணவர்கள் சென்றவுடன் திரும்பிய நிலையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

நீதிமன்றம், வைத்தியசாலை வழமை போல் இயங்கின. ஆனால், மாவட்ட செயலகம், பிரதேச செயலகம், விவசாய திணைக்களம், தேர்தல் திணைக்களம் போன்ற அரச திணைக்களங்கள் ஊழியர்கள் வருகை குறைவால் மந்தகதியில் இயங்கியமையும், இந்தத் திணைக்களங்களில் சேவையைப் பெற்றுக்கொள்ள வந்தவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றமையும் குறிப்பிடத்தக்கது.

### அலி சப்ரி...

எதிராகத் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னரும் அலி சப்ரி ரஹீம் இந்த வழக்கு தொடர்பான விசாரணைக்கு நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருந்துள்ளதுடன் அவர் சார்பில் சட்டத்தரணியும் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




# மன்னார் விபத்தில் உயிரிழந்த அருட்தந்தையின் பூதவுடல் தூய செபஸ்தியார் பேராலயத்தில் மக்களின் அஞ்சலிக்கு!

(எஸ்.ஆர்.லெம்பேட்)

வீதி விபத்தில் உயிரிழந்த மன்னார் மடு மாதா சிறிய குருமட உதவி இயக்குநர் அருட்தந்தை கீ.ஜொனார்தன் கூஞ்ஞுவின் பூதவுடல் மக்களின் அஞ்சலிக்காக இன்று மன்னார் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் வைக்கப்பட்டது.

அருட்தந்தை கீ. ஜொனார்தன் கூஞ்ஞு கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு மன்னார் – தலைமன்னார் பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்தார்.














# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ரணில் இறங்கி வரார்!

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் சமயம். கழுத்தை இறுக்கிப்பிடித்தால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இறங்கி வந்துவிடுவார் என்று எதிர்பார்த்து பல தொழிற்சங்கங்களும் வேலைநிறுத்த போராட்டம், பணிப் புறக்கணிப்பு என்று களத்தில் இறங்கி உள்ளன.

ஆனால், உண்மையில் ரணில் விக்கிரமசிங்க இந்தப் பூச்சாண்டிகளுக்கெல்லாம் அஞ்சுபவர் அல்லர்.

இரண்டரை மாதங்களுக்கு மேல் வேலை நிறுத்தத்தில் குதித்திருக்கும் பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர்கள் அதை இப்போது பட்டவர்த்தனமாக உணர்ந்து கொண்டிருப்பார் என்று நம்பலாம்.

அவர்களின் போராட்டத்திற்கு ரணில் அசைந்து கொடுக்கவில்லை. அவர் அசைந்து கொடுக்கவில்லை என்று கூறுவதிலும் பார்க்க, நாட்டின் நிதி நிலைமை அந்தத் திசையில் அவரை சிந்திக்கவே விடவில்லை என்பதுதான் உண்மை. யதார்த்தம்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்காக வேறு வழியின்றி சர்வதேச நாணய நிதியத்தின் கால்களில் விழுந்து இருக்கின்றது இலங்கை. பொருளாதார விடயங்களில் அதன் நிபந்தனைகளை மீறி ரணிலின் அரசு - ரணிலின் அரசு மட்டுமல்ல, இப்போது இலங்கையின் ஆட்சி பீடத்துக்கு வரக்கூடிய எந்த அரசும் - தன் னிஷ்டப்படி செயல்பட முடியாது. அது தெரிந்த விடயம்தான்.

புதிய நோட்டுக்களை அச்சிட முடியாது. இந்தப் பின்புலத்தில், சம்பள அதிகரிப்பு என்று பல தரப்புக்களும் கழுத்தை நெரித்தால், அதை வழங்குவதற்கு ரணில் அரசுக்கு ஒரே மார்க்கம் தான் உண்டு. அதையும் அரசு வெளிப்படையாகக் கூறிவிட்டது. சம்பள அதிகரிப்பை வழங்குவதற்காக வரிவிதிப்புக்களை அதிகரிப்பதுதான் ஒரே வழி. ஏற்கனவே பொருள்கள், சேவைகள் மீதான பெறுமதி சேர்வரி 18 வீதம் வரை உயர்ந்து விட்டது. அதன் தாக்கம் பொது மக்களை ஒவ்வொரு பொருள் கொள்வனவிலும், ஒவ்வொரு சேவையைப் பெறுவதிலும் அவர்களை மோசமாகப் போட்டுத் தாக்குகின்றது. இந்தப் பின்புலத்தில் இன்னொரு வரி விதிப்பு என்றால் மக்கள் கொதித்துப் போவர்.

இப்போதுதான் அரச ஊழியர்கள் அனைவருக்கும் பத்தாயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டிருக்கின்றது.

இப்போது ஒவ்வொரு தொழிற்சங்கமும் சம்பள முரண்பாட்டை நீக்கு என்ற புதிய தந்திரத்தில் சம்பள உயர்வுக்குப் போராடத் தொடங்கியுள்ளன.

மாணவர்களின் கல்வியை, உயர் கல்வியை, அத்தியாவசிய சேவைகளைக் குழப்பி, இத்தகைய போராட்டங்களை தேர்தல் நெருங்கும் சமயத்தில் முன்னெடுப்பது மனச்சாட்சி அற்ற போக்கு.

அரசியல் தலைமைகளுடன் பேசி, சரியானதை செய்யாத தலைமைகளை விரட்டவும், சரியானதை செய்யக்கூடிய தரப்புகளிடம் அதிகாரத்தைக் கொடுக்கவும், அற்புதமான சந்தர்ப்பமாக ஜனாதிபதி தேர்தல் வந்திருக்கிறது.

கலந்துரையாடல் மூலம் இவ்விடயத்தில் தீர்க்கமான தீர்மானம் எடுத்து, தந்திரோபாயமாக நடந்து கொள்வதுதான் சரியான முறை.

அதை விடுத்து, இந்த மூன்று மாதத்துக்குள் போராட்டக் கெடுபிடிகளை மும்முரமாக்கி, ரணில் அரசின் கழுத்தைப் பிடித்து நசுக்கி, விடயங்களுக்கு இணங்கப் பண்ணலாம், தேர்தல் காலத்தில் வாக்குகளுக்காக ரணிலின் தலைமை இணங்கி - இறங்கி - வந்து விடும் என்றெல்லாம் கனவு காண்பது, ரணில் என்ற தனிநபரின் ஆளுமையை புரியாத தொழிற்சங்க தலைவர்களின் முட்டாள் தந்திரோபாயம்.

தாங்கள் சமர்ப்பித்த 'இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை' யோசனைத் திட்டத்தை சாதகமாக பரிசீலிப்பார் என ஓர் உறுதிமொழியைத் தந்தால் 2005 ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் மூலம் ரணில் விக்கிரமசிங்கவை வெல்ல வைப்போம் என்று புலிகள் முன்வைத்த நிபந்தனைக்கு இணங்க மறுத்து, தோல்வியைத் தேடித் தழுவி, அதனால் ஜனாதிபதி பதவியில் இருந்து 17 ஆண்டுகள் தள்ளி வைக்கப்பட்டவர் ரணில் விக்கிரமசிங்க.

புலிகளின் நிபந்தனைக்கு வெறும் தலையசைப்பை வழங்க மறுத்து, அப்போதே தோல்வியைத் தேடி அரவணைத்துக் கொண்ட கொண்டவர் ரணில் விக்கிரமசிங்க. அவரைத் தொழிற்சங்கப் போராட்டம் மூலம் கடைசி நேரத்தில் இணங்க - இறங்க - வைக்கலாம் என்ற தொழிற்சங்கங்களின் பகீரதப்பிரயத்தனம் வெறும் பகல் கனவுதான்!



# கல்வி மூலம் புதிய தலைமுறையை நாங்கள் உருவாக்குதல் வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ

ஸ்மார்ட் கல்வி மூலம் புதிய தலைமுறை உருவாகும். புதிய தலைமுறை ஆக்க பூர்வமான புதிய படைப்புகளை நோக்கி நகர்ந்து உலகை வெல்லும் தலைமுறையாக மாறும். அவர்கள் நாட்டைக் கட்டியெழுப்பும் தலைமுறையினர் என்பதால், நாம் இந்தப் பிள்ளைகள் மீது முதலீடு செய்து அவர்களை பலப்படுத்த வேண்டும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஷ தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 299 ஆவது கட்டமாக 11 லட்சத்து 77 ஆயிரம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் மற்றும் அகராதிகள் என்பன மன்னார், சித்திவிநாயகர் இந்துக் கல்லூரிக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று (08) இடம்பெற்றது.

இதன்போது, பாடசாலை நூலகத்துக்குத் தேவையான ஆங்கில நூல்களைக் கொள்வனவு செய்து கொள்வதற்கு பாடசாலை அபிவிருத்தி நிதியத்துக்கு ஒரு லட்சம் ரூபா நிதியுதவியும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஸ்மார்ட் உலகில் நாம் ஸ்மார்ட் குடிமக்களாக இருக்க வேண்டும். உலகை வெல்ல ஸ்மார்ட் மிகவும் அவசியமான ஒன்றாகும். ஒட்டுமொத்த சமுதாயத்தையும் ஸ்மார்ட்டாக மாற்றும் திட்டங்களை வளர்முக நாடுகள் செயல்படுத்தி வருவதால், அதையொத்த திட்டம் எமது நாட்டிலும் முன்னெடுக்கப்பட வேண்டும். மீன்பிடித் தொழில், விவசாயம், சுற்றுலாத் தொழில் என சகல தொழிற் துறைகளும் ஸ்மார்ட் அமைப்பில் இருக்க வேண்டும். ஸ்மார்ட் கட்டமைப்பை நோக்கி மாறுவதன் மூலம் எம்மால் ஓர் நாடாக பாரிய முன்னேற்றத்தை அடைய முடியும் .


சீர்குலைந்து கிடக்கும் கல்வி முறைக்குப் புதிய பக்க பலத்தைக் கொடுத்து, அரச பாடசாலைகள் உயர் மட்டத்துக்கு மேம்படுத்தப்படும்.– என்றார்.











# அதிபர், ஆசிரியர்களின் சுகயீன விடுமுறை மலையக பாடசாலைகளில் கல்வி முடக்கம்

நாடளாவிய ரீதியில் உள்ள பாடசாலைகளின் அதிபர் ஆசிரியர்களின் சுகயீன விடுமுறை போராட்டம் காரணமாக மலையக பகுதிகளில் உள்ள அனைத்து பாடசாலைகளின் கல்வி நடவடிக்கை முடங்கியது.

இன்று செவ்வாய் கிழமை முன்னெடுக்கப்பட்ட சுகயீன வீடுமுறைப் போராட்டம் காரணமாக மலையகத்தில் உள்ள பாடசாலைகளுக்கு மாணவர்கள் சிலர் வருகை தந்துள்ள போதிலும் அதிபர், ஆசிரியர்கள் சமுகம் தராதமையால் மாணவர்கள் மீண்டும் திரும்பி சென்றனர்.

இதேவேளை, சில பாடசாலைகள் வெறிச்சோடிக் காணப்பட்டது. அதிபர் ஆசிரியர்களின் இந்த தொடர் சுகயீன விடுமுறை போராட்டம் காரணமாக தமது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கை தொடர்ந்தும் பாதிக்கப்படுகிறது என்றும் அதிபர், ஆசிரியர்களின் பிரச்சினைக்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பெற்றோர் குறிப்பிட்டனர்.

# வாழ்வாதாரத்தை மேம்படுத்த ஆடுகள் வழங்கிவைப்பு



( வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேசத்தில் பின் தங்கிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த ஆடுகள் வழங்கி வைக்கப்பட்டன.

திருக்கோவில் பிரதேச செயலகத்தின் கீழ் சங்கமன் கிராமம், தங்கவேலாயுதபுரம், கஞ்சிகுடியாறு ஆகிய கிராமங்களில் சௌபாக்கியா உற்பத்திக் கிராம செயற்றிட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள 30 பயனாளிகளில் முதற்கட்டமாக 15 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளும் பொருட்டு ஆடுகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.



இந்த நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன், உதவிச் செயலாளர் திருமதி எஸ். நிருபா, கணக்காளர் ஏ.எல்.எம். நிபாஸ், உதவி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி அனோஜா உஷாந்த் மற்றும் பயனாளர்களின் பிரிவுகளுக்கு உரிய கிராம சேவை உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# சுமார் 11 வருடங்களின் பின்னர் நடந்த மத்திய மாகாண இஸ்லாமிய தினவிழா







**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

மத்திய மாகாண கல்வித் திணைக்களம் ஏற்பாடு செய்திருந்த மத்திய மாகாண இஸ்லாமிய தின விழா அக்குறணை பாளிகா மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடந்தேறியது.

மத்திய மாகாண முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்திப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் உனைஸ் ஆரிப் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் எம். ஜீ. அமரசிரி பியதாச பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

மத்திய மாகாணத்தில் கல்வி அபிவிருத்திக்குப் பொறுப்பான மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் ஏ.எல். சாருடீன் மற்றும் மத்திய மாகாண கல்வி நிர்வாகத்துக்குப் பொறுப்பான முன்னாள் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி சீ.ரி.ஜி. மாயாதுன்ன ஆகியோர் கௌரவ அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

பிரிகேடியர் திலக் மாயாதுன்ன விசேட அதிதியாகக் கலந்து கொண்டதுடன் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், வலய இணைப்பாளர்கள், மத்திய மாகாண பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

2023 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட மீலாத் தின போட்டிகளில் மாகாண மட்ட வெற்றியாளர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களும் வழங்கப்பட்டன. மாகாண மட்ட மீலாத் போட்டிகளில் வெற்றிபெற்ற இந்து சமயத்தைச் சார்ந்த இரண்டு மாணவர்கள் விசேட பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டமை விசேட நிகழ்வாகும்.

சுமார் பதினொரு வருடங்களின் பின்னர் நடைபெற்ற இந்நிகழ்வு மிக நேர்த்தியாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.





# கபேயுடன் கலந்துரையாடியுள்ள கனேடியத் தூதரகப் பிரதிநிதிகள்

**(ஹஸ்பர்)**

சுதந்திரமானதும் நீதியானது மான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் மற்றும் கனேடிய தூதரகப் பிரதி நிதிகளுடன் அண்மையில் ஒரு கலந் துரையாடல் இடம்பெற்றது.

கனேடிய தூதரக இரண்டாவது செயலாளர் பேட்ரிக் பிக்கரிங் மற்றும் அரசியல் பிரிவு பொறுப்பாளர் ஜி.சாஹித் யனன் ஆகியோர் இராஜகிரியவில் உள்ள தலைமை அலுவலகத்தில் கலந்துரையாடலில் கலந்துகொண் டனர்.

தற்போதைய அரசியல் நிலவரம், எதிர்வரவிருக்கும் தேர்தலுக்கான தேர் தல் கண்காணிப்பு நடவடிக்கைகள், கடந்தகால தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகள், மற்றும், வாக்காளர் கள் அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டம் மற்றும் அரசியலில் பெண்கள் பங் கேற்பு போன்றவற்றை உள்ளடக்கிய கலந்துரையாடல் இடம்பெற்றது.

கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கீன் இந்தக் குழுவுடனான கலந்துரையாடலுக்கு தலைமை தாங்கினார். இந்த கலந் துரையாடலில் கபே நிர்வாக பணிப்பா ளர் திருமதி சுரங்கி ஆரியவன்ஷவும் கலந்துகொண்டார்.

# பேரா உதவிக்கரங்கள் அமைப்பின் நிதி அனுசரணையில் ஒருநாள் செயலமர்வு





**(நூருல் ஹுதா உமர்)**

பேரா உதவிக் கரங்கள் அமைப்பின் நிதி அனுசரணையில் நியூ சன் ஸ்டார் இளைஞர் கழகத்தால் சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலகத்திற்கு சிறி கோரக்கர் தமிழ் மகா வித்தியாலயத்தில் தெரிவு செய்யப்பட்ட 60 மாணவர்களுக் கான ஒரு நாள் இயற்கை விவசாய வீட்டுத் தோட்டச் செயலமர்வு நியூ சன் ஸ்டார் இளைஞர் கழகத்தின் தலை வர் வினோஜ்குமார் தலைமையில் பாட சாலையின் விஜயகுமாரன் அரங்கில் இடம்பெற்றது.

இதன்போது பாடசாலையின் அதி பர் இளங்கோவன், நியூ சன் ஸ்டார் இளைஞர் கழகத்தின் உப தலைவர் லுசாந் அவர்களும் இளைஞர் சேவை அதிகாரி டொஜானி மற்றும் பபேசா மற்றும் லோஜி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தச் செயலமர்வில் போது மண் பண்படுத்தல், விதைகள் நடுகை, வினைத் திறனான நீர்ப்பாசனம், வீட்டுத் தோட்ட முகாமைத்துவம், பீடைக்கட் டுப்பாடுமுறைகள், நிலைபேறானவீட்டுத் தோட்ட முயற்சியாண்மை போன்ற செயற்பாடுகளை மாணவர்களுக்கு செயன்முறையாக காட்டப்பட்டன.

இந்தத் திட்டம் தொடர்ச்சியாக ஆறு மாதங்களுக்கு நடைமுறைப்படுத் தப்பட்டு, ஒவ்வொரு மாதமும் மாண வர்களுக்கு ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் வழங்குவதற்கு விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மாணவர்கள் தங்களது ஓய்வு நேரத் தில் பெற்றோருடன் சேர்ந்து வீட்டுத் தோட்டம் செய்வதால் நஞ்சற்ற உணவு உற்பத்தி மற்றும் ஒவ்வொரு வீட்டிலும் சேமிப்பு என்பதை இலக்காகக் கொண்டு இந்தச் செயலமர்வு திட்டமிடப்பட் டது.

இதன்போது 60 மாணவர்களுக்கு வீட்டுத் தோட்டம் செய்வதற்கான பயிர் கன்றுகள் மற்றும் விதைகள் வழங்கப் பட்டன. பேரா உதவிக் கரங்கள் அமைப்பு இலங்கையில் பல நிலைபேறான மனித நேயப் பணிகளை செய்து வருகின் றமை குறிப்பிடத்தக்கது.

# மலேசியாவில் செந்தில் தொண்டமான் பத்துமலைக் குகை முருகனில் வழிபாடு!






(நூருல் ஹுதா உமர் )

மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர் டட்டுக் ஸ்ரீசரவணன் முருகனின் அழைப்பின் பேரில் கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமான் மலேசியாவில் உள்ள பத்துமலை குகை முருகன் ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடுபட்டார்.

கோவில் கமிட்டியின் தலைவர் டான்ஸ்ரீ டத்தோ டாக்டர்.ஆர்.நட்ராஜா மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர் ஆகியோரால் செந்தில் தொண்டமான் கௌரவிக்கப்பட்டார்.



# காத்தான்குடி கடற்கரையில் விழிப்புணர்வு நாடகம்!





**(பழுவூரான்)**

காத்தான்குடி அருங்காட்சியகம் சொல்லும் செய்தியைக் கதிரவன் வீதி நாடகம் மூலம் மக்களுக்கு விழிப்பூட்டும் நிகழ்வு பல்வேறு இடங்களில் இடம்பெற்று வருகின்றது.

இதன் அடிப்படையில் கல்லடிக் கடற்கரையில் பற்றி மீடியா ஊடகம் மற்றும் உதவும் கரங்கள் அமைப்பு ஆகியவற்றின் ஒழுங்குபடுத்தலில் ஆயிரக் கணக்கான பார்வையாளர்கள் முன்னிலையில் “காலம் சொல்லும் கதை” எனும் கருப்பொருளில் கதிரவன் நிறுவனத் தலைவர் கதிரவன் த.இன்பராசா தலைமையில் நகைச்சுவை நடிகர் த.பூபாலசிங்கம் மற்றும் புதுவையூர் பு.தியாகதாஸ் ஆகியோரின் பங்குபற்றலுடன் மிகச்சிறப்பாக இந்த நாடகம் நிகழ்த்தப்பட்டது.

ஒரு நாட்டின் பன்முகத்தன்மை, அடையாளம், மக்கள் வாழ்வு, பாரம்பரியம், வரலாறு என்பவற்றோடு நல்லிணக்கத்தின் அவசியம் பற்றி மிக எளிமையான விளக்கத்தோடு அரங்கேற்றப்பட்டது.

இந்த நிலையில் அவை தொடர்பான அருங்காட்சியகம் இலங்கையின் வரலாற்று செழுமையை வெளிக்காட்டும் விதமாக இன்று 9 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதிவரை நடக்கவுள்ளது. அதனை மக்கள் வந்து பார்ப்பதை தூண்டும் வகையில் உணர்வு பூர்வமாக நாடக ஆற்றுகை இடம் பெற்றது.



# பெண்களுக்கான கூடைப்பந்தாட்டம்
# கல்முனை கார்மல் பற்றிமா சம்பியன்


**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான 15 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் கல்முனை கார்மல் பற்றிமா தேசிய கல்லூரி சம்பியனானது.

இலங்கைக் கூடைப்பந்தாட்ட சம்மேளத்தால் நடத்தப்பட்ட கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயதுக்கு உட்பட்ட மாணவர்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டி நடத்தப்பட்டது.

இதிலேயே கல்முனை கார்மல் பற்றிமா தேசிய கல்லூரி மாணவிகள் முதலாம் இடத்தைப் பெற்றுச் சம்பியனாகி தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகினர்.

இந்த மாணவர்களின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த உடற்கல்வி ஆசிரியர் திருமதி ஹயாளினி சிவாகரனுக்கும், பயிற்றுவிப்பாளரான க.தரிஷாந்தனுக்கும் , வெற்றி ஈட்டிய மாணவர்களுக்கும் மற்றும் ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து பெற்றோர்களுக்கும் பாடசாலைச் சமூகம் சார்பில் வாழ்த்துக்களும், பாராட்டுக்களும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

# கலாநிதி ஆறு திருமுருகனின் சேவையை மழுங்கடிக்கும் முயற்சி கண்டனத்துக்குரியது

## அகில இலங்கை இந்து மா மன்றத்தின் கண்டனம்






கலாநிதி ஆறு திருமுருகனின் சேவையை மழுங்கடிக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டுவரும் செயற்பாடுகள் கண்டனத்துக்கு உரியவை.

இவ்வாறு அகில இலங்கை இந்து மா மன்றத்தின் கண்டனச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எமது நாட்டின் தமிழும் சைவ சமயமும் தழைத்தோங்க பல சமய, சமூக நிறுவனங்கள் தொண்டாற்றி வருகின்றன. அந்த வகையில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் தலைமையில் இயங்கி வரும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம், சிவபூமி அறக்கட்டளை மற்றும் உபதலைவராக அகில இலங்கை இந்து மா மன்றத்தின் யாழ். பணிமனையினூடான சேவைகள் சைவப் பெரு மக்களின் பெருமதிப்பையும் பாராட்டுக்களையும் பெற்றவையாகும்.

கலாநிதி ஆறு திருமுருகன் நாடறிந்த, புகழ் பூத்த சைவ சமயப் பேச்சாளர். இவரது பேச்சுக்கள் மூலம் எமது சமயத்தவரின் பக்தி உணர்வை, நம்பிக்கையைக் கட்டியெழுப்பி அவர் சைவ மக்களிடையே ஒரு தனி இடத்தைப் பெற்றிருக்கிறார்.

இவர் ஒரு ஆசிரியராக, அதிபராகச் சேவையாற்றி, அவற்றையெல்லாம் ஐம்பதாவது வயதினிலே விட்டு விட்டு, சமய, சமூகச் சேவைகளுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக முழு நேரச் சேவையைச் செய்து வருவது யாவரும் அறிந்ததே.

இப்பேர்ப்பட்ட பெருமதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய கலாநிதி ஆறு திருமுருகனுக்குக் களங்கம் ஏற்படுத்தி அவரின் உன்னத முழு மூச்சான சேவையை மழுங்கடிக்க முயற்சிக்கப்படும் எந்தச் செயற்பாட்டையும் ஒட்டுமொத்த தமிழ், இந்துச் சமுதாயம் வன்மையாகக் கண்டிக்கிறது.

இவை சம்பந்தமாக எடுக்கப்படும் நடவடிக்கைகளை அகில இலங்கை இந்து மா மன்றமும் அதன் இலங்கை பூராக உள்ள அங்கத்துவச் சங்கங்களும் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்றன என்பதைக் கூறி வைக்க விரும்புகிறோம்.– என்றுள்ளது.





# 30 பயணிகளுடன் வந்த பஸ் திடீரென தீப்பற்றி எரிந்தது!

**பெங்களூரு,ஜூலை09**

30 பயணிகளுடன் வந்த பஸ் திடீரென தீப்பற்றி எரிந்தது.

நல்வாய்ப்பாக பஸ்ஸில் இருந்த 30 பயணிகளும் உடனடியாக வெளியேறியமையால் உயிர்சேதம் தவிர்க்கப் பட்டது.

பெங்களூரு மெட்ரோ போக்குவரத்துக்கழகத்தால் 144ஈ வழித்தடத்தில் இயக்கப்பட்ட பஸ் 30 பயணிகளுடன் சிவாஜி நகர் நோக்கி இன்று காலை 9 மணி அளவில் மாநகரின் எம்.ஜி.சாலையில் அனில் கும்ப்ளே வளைவுப் பகுதியில் சென்று கொண்டிருந்தது. அப்போது திடீரென பஸ் தீப்பிடித்தது.

பஸ்ஸின் இன்ஜினில் இருந்து பற்றத் தொடங்கிய தீ, மளமளவென பஸ் முழுவதும் பரவியது. பஸ்ஸின் முன்பக்கத்திலிருந்து புகை வருவதைக் கண்ட நடத்துனர் உடனடியாக பஸ்ஸை விட்டுக் கீழே இறங்குமாறு வலியுறுத்தினார். உடனடியாக பஸ்ஸில் இருந்த 30 பயணிகள் வெளியேறினர். இதனால் பெரும் அசாம்பாவிதம் தவிர்க்கப்பட்டது. இதையடுத்து தகவலறிந்து சம்பவ இடத்துக்கு உடனடியாக விரைந்த தீயணைப்புத்துறையினர் தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர். விசாரணையில் பஸ்ஸின் இன்ஜின் மிகவும் வெப்பமாக இருந்ததால் பஸ் தீப்பிடித்துள்ளதாகத் தகவல் வெளியாகி உள்ளது. தீப்பிடித்த பஸ் கோரமங்களா பணிமனைக்கச் சொந்தமானது.

# மூன்றாவது பதவிக் காலத்தில் நரேந்திர மோடி மூன்று மடங்கு வலிமையுடன் பணியாற்றுவாராம்

## மொஸ்கோவில் இந்திய வம்சாவளியினர் மத்தியில் அவரே தெரிவிப்பு



**மொஸ்கோ, ஜூலை 09**

மூன்றாவது முறையாக இந்தியாவின் பிரதமராகப் பதவியேற்றுள்ளேன். 3 மடங்கு வலிமையுடன், 3 மடங்கு அதிக வேகத்தில் பணியாற்றுவேன் என்ற உறுதியுடன் பதவியேற்றேன்.

– இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி கூறியிருக்கின்றார்.

இந்தியாவின் வளர்ச்சியை கண்டு உலகம் வியப்படைந்துள்ளது எனவும் பிரதமர் மோடி பேசினார்.

ரஷ்யாவுக்கு அரசுமுறை பயணம் மேற்கொண்டிருந்த பிரதமர் நரேந்திர மோடி, மொஸ்கோவில் இந்திய வம்சாவளியினர் மத்தியில் பேசினார். அப்போது பிரதமர் மோடி கூறியவை வருமாறு :-

மூன்றாவது முறையாக ஆட்சி அமைத்த பிறகு, முதல்முறையாக புலம்பெயர்ந்த இந்தியர்களுடன் உரையாடுகிறேன். மூன்றாவது முறையாக இந்தியாவின் பிரதமராகப் பதவியேற்று இன்றுடன் ஒரு மாதம் நிறைவடைந்துள்ளது. 3 மடங்கு வலிமையுடன், 3 மடங்கு அதிக வேகத்தில் பணியாற்றுவேன் என்ற உறுதியுடன் பதவியேற்றேன். இம்முறை இந்தியாவை உலகின் மூன்றாவது பொருளாதாரமாக மாற்றுவதே இலக்கு. இந்த முறை ஏழைகளுக்கு மூன்றாவது கட்டமாக 3 கோடி வீடுகள் வழங்கப்படவுள்ளன. 3 கோடி கிராமப் பெண்களை லட்சாதிபதி ஆக்குவதே அரசின் இலக்கு.

உலகில் வேறு எந்த நாடும் சென்றடைய முடியாத நிலவின் பகுதிக்கு சந்திரயானை வெற்றி அடைய செய்த நாடு இந்தியா. டிஜிட்டல் பரிவர்த்தனையில் உலகுக்கு நம்பகமான மாதிரியை வழங்கும் நடாக இந்தியா உள்ளது. சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றும் நாடாக இந்தியா இன்று உள்ளது. இந்தியா மாற்றத்தை நோக்கி செல்வதாக அனைவரும் கூறுகிறார்கள். கடந்த 10 ஆண்டுகளில் இந்தியாவின் வளர்ச்சியை கண்டு உலகம் வியப்படைந்துள்ளது – இவ்வாறு அவர் கூறினார்.



# ஜனநாயகத் தலைவர் - கொடூரக் குற்றவாளி இருவரும் கட்டித் தழுவிய பெரும் அநாகரிகம்

## மோடி - புடின் சந்திப்பை இப்படி விமர்சிக்கின்றார் உக்ரைன் அதிபர்



நேற்றைய தினம் உக்ரைனின் பல்வேறு பகுதிகள் மீது ரஷ்யா நடத்திய தாக்குதலில் 41 பேர் பலியாகினர். இந்தச் சமயத்தில் உலகின் மிகப்பெரிய ஜனநாயகத்தைச் சேர்ந்த தலைவர் ஒருவர் உலகின் கொடூரமான குற்றவாளியோடு மொஸ்கோவில் இன்று கட்டித் தழுவியுள்ளார் என்று மோடி – புடின் சந்திப்பை விமர்சித்திருக்கின்றார் உக்ரைன் அதிபர்.

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் வைத்து இன்று ஜஜுலை 9ஸ நடக்கும் 22ஆவது இந்தியா – ரஷ்யா வருடாந்திர உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக மோடி நேற்று ரஷ்யா சென்றார். பிரமாண்டமாக ஏற்பாடு செய்யப்பட்ட வரவேற்பில் மோடியை புடின் காட்டித் தழுவி அன்பை வெளிப்படுத்தினார். நேற்றைய தினம் அதிபர் புடினுடன் தேநீர் விருந்தில் அவரது இல்லத்தில் வைத்து மோடி உரையாடினார். பின்னர் மோடிக்கு முக்கிய பகுதிகளை புடின் சுற்றிக் காட்டினார்.

சிறிது நேரம் கோல்ப் வண்டியில் இருவரும் பயணித்தனர். அதனபின் புடின் ஏற்பாடு செய்த இரவு விருந்தில் அவருடன் மோடி உணவருந்தினார். அதைத்தொடர்ந்து இன்று நடக்கும் மாநாட்டில் மோடி கலந்துகொள்கிறார். இந்நிலையில் மோடி ரஷ்யா சென்றுள்ளது குறித்து உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி வருத்தம் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மீது போர் தொடுத்துள்ள ரஷ்யா கடந்த 2 ஆண்டுகளுக்கும் மேலாக உக்ரைன் தாக்குதல் நடத்தி வருகிறது. நேற்றைய தினம் உக்ரைனின் பல்வேறு பகுதிகள் மீது ரஷ்யா நடத்திய தாக்குதலில் 41 பேர் பலியாகினர். உக்ரைனின் குழந்தைகள் மருத்துவமனை மீதும் ரஷ்யா நேற்றைய தினம் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியுள்ளது. இந்நிலையில் நேட்டோ கூட்டத்தில் பங்கேற்பதற்காக அமெரிக்காவுக்குப் பயணித்துக்கொண்டிருக்கும் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி, ரஷ்யப் பயங்கரவாதிகள் இந்த தாக்குதளுக்கு பதில் சொல்லியாகவேண்டும் என்று தெரிவித்தார்.

இதற்கிடையில், மோடியின் ரஷ்யப் பயணம் குறித்து ஜெலன்ஸ்கி தனது எக்ஸ் பக்கத்தில், ‘இது மிகப்பெரிய ஏமாற்றத்தை அளித்துள்ளது. உலகின் மிகப்பெரிய ஜனநாயகத்தை சேர்ந்த தலைவர் ஒருவர் உலகின் கொடூரமான குற்றவாளியோடு மொஸ்கோவில் இன்று கட்டித் தழுவியுள்ளமை அமைதிக்கான முயற்சிகள் மீது விழுந்த பெருத்த அடியாக உள்ளது’ என்று தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் இத்தாலியில் நடந்த ஜி 7 மாநாட்டில் மோடியும் ஜெலன்ஸ்கியும் சந்தித்துக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கனடா முரசு

பக்கங்கள் 05

செவ்வாய்க்கிழமை 09/07/2024

## கேச் க்ரீக்கில் ஞாயிறன்று உச்சம் தொட்ட வெப்பம்!

பிரிட்டிஷ் கொலம்பியா,ஜூலை 9

பிரிட்டிஷ் கொலம்பியாவில், ஞாயிற்றுக்கிழமை கேச் க்ரீக்கில் அதிகளவு வெப்பநிலை பதிவாகியுள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியா C2



# நேட்டோ உச்சி மாநாட்டில் ட்ரூடோ வர்த்தகத்தில் கவனம் செலுத்துவார்

**ஒன்ராறியோ, ஜூலை 9**

**நேட்டோ உச்சி மாநாட்டின் போது வர்த்தகத்தில் கவனம் செலுத்த பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ திட்டமிட்டுள்ளார்.**

**இன்று (ஜூலை 9) காலை ஆரம்பமாகும் நேட்டோ உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக பிரதமர் ட்ரூடோ நேற்று அமெரிக்காவின் வொஷிங்டன் நகரிற்கு பயணமானார்.**

இந்த உச்சி மாநாட்டில் பிரதமர், கனடாவுக்கான வணிக வாய்ப்புகளை மேம்படுத்தும் முயற்சியில் ஈடுபடவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அவர் பல்வேறு தரப்பினரிடம் சந்திப்புகளையும் மேற்கொள்ளவுள்ளார்.

கனடாவின் மிக முக்கியமான வர்த்தகப் பங்காளியாக அமெரிக்கா உள்ளது.

கடந்த ஆண்டு, இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு வர்த்தகம் 1.3 டிரில்லியன் டொலர்களாகும்.

## டொரன்டோ பார்க்டேலில் இளைஞர் சுட்டுக்கொலை

ஒன்ராறியோ, ஜூலை 9

பார்க்டேலில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் நபர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

பார்க்டேலில் அமைந்துள்ள தொடர்மாடி குடியிருப்பில் இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குடியிருப்பில் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றதாகத் தகவல் கிடைத்தமையையடுத்து, பொலிஸார் அந்த இடத்திற்கு விரைந்துள்ளனர்.

சம்பவ இடத்தில் ஆண் ஒருவர் படுகாயமடைந்து கிடந்தார் எனவும் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்து விட்டார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அவர் சுமார் இருபது வயது பராயத்தைச் சேர்ந்த கறுப்பின இளைஞர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் டொரன்டோ பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.








# வான்கூவர் வளாக மைதானத்தை விட்டு திடீரென விலகிய ஆர்ப்பாட்டக்காரர்கள்

பிரிட்டிஷ் கொலம்பியா, ஜூலை 9

இரண்டு மாதங்களுக்கும் மேலாக பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக் கழகத்தின் வான்கூவர் வளாகத்தில் ஒரு விளையாட்டு மைதானத்தை ஆக்கிரமித்திருந்த பலஸ்தீனிய சார்பு எதிர்ப்பு முகாம், அந்த ஆர்ப்பாட்டக் காரர்களால் ஆரவாரமோ அல்லது முன்னறிவிப்போ இல்லாமல் அகற றப்பட்டது.

கடந்த வாரம், போராட்ட அமைப் பாளர்கள் வளாகத்தில் 'ஒவ்வொரு சாத்தியமான வழியையும்' தொடர்ந்து பயன்படுத்துவதாக உறுதியளித்தனர். ஆனால் திங்கட்கிழமைக்குள், மைதா னத்தில் ஒருமுறை போடப்பட்ட டஜன் கணக்கான கூடாரங்களில் ஒவ்வொன்றும் இல்லாமல் போய் விட்டன. இருப்பினும் தளத்தைச் சுற்றிய தடுப்புகளும் வேலிகளும் இருந் தன.

ஞாயிற்றுக்கிழமை பல்கலைக்க ழகத்தின் ட்ரான்சிட் லூப் மற்றும் மாணவர் சங்க கட்டடத்திற்கு அடுத் துள்ள 'மக் இன்ஸ் ஃபீல்டில் இருந்து போராட்டக்காரர்கள் வெளியேறினர்' என்று பிரிட்டிஷ் கொலம்பிய பல் கலைக்கழக அறிக்கை தெரிவித் துள்ளது.

எனினும், அதற்கான காரணம் என்னவென்பதை அந்த அறிக்கை விளக்கவில்லை.

இதேவேளை, போராட்ட முகாம் மூடப்பட்டதை அதன் பேச்சாளர் ஒரு குறுஞ்செய்தியில் உறுதிப்படுத் தியுள்ளார்.

# கடுமையான வெப்பம் காரணமாக விமான சேவைகள் தாமதமாகலாம்

## பியர்சன் விமான நிலைய நிர்வாகம் அறிவிப்பு




கனடாவில் விமானப் பயணங்கள் மேற்கொள்வது குறித்து விசேட அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

குறிப்பாக ரொறன்ரோவில் கடுமையான வெப்பநிலை நீடிக்கும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனால் ரொறன்ரோ பியர்சன் விமான நிலையத்தின் விமானப் போக்குவரத்து பாதிக்கப்படலாம் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

கனடிய வளிமண்டலவியல் திணைக்களம் இந்த எதிர்வு கூறலை வெளியிட்டுள்ளது.

தென் ஒன்றாரியோ பகுதியில் கடுமையான வெப்ப நிலையுடன் காற்று பலமாக வீசக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

கடும் வெப்பநிலை காரணமாக விமானப் பயணங்கள் திட்டமிட்டவாறு மேற்கொள்ள முடியாமல் போகலாம் என பியர்சன் விமான நிலைய நிர்வாகம் அறிவித்துள்ளது.

## கேச் க்ரீக்கில்...


(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விலும் அதற்கு அப்பாலும் வெப்பநிலையை உயர்த்திய வெப்ப அலையைச் சமாளிக்க முடியாது மக்கள் அவதியுறுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கேச் க்ரீக் ஞாயிற்றுக்கிழமை ஒரு ஹாட் ஸ்பொட் ஆக இருந்ததுடன், அதிகபட் சமாக 40.3 பாகை செல்சியஸ் பதிவாகி யிருந்தது.

2015இல் இதே திகதியில் பதிவான 36.9 பாகை செல்சியஸ் என்ற சாதனையை இந்த அளவு முறியடித்துள்ளது.





# உக்ரைனில் குழந்தைகளின் மருத்துவமனையை ரஷ்யா தாக்கியமைக்கு ட்ரூடோ கடும் கண்டனம்

ஒன்ராரியோ, ஜூலை 9

இந்த வாரம் வொஷிங்டனில் நடைபெறும் நேட்டோ தலைவர்களின் உச்சிமாநாட்டில் உக்ரேனில் நடந்து வரும் போர் முக்கிய உரையாடலாக அமைந்திருந்த நிலையில், திங்களன்று ஒரு பெரிய ரஷ்ய ஏவுகணைத் தாக்குதல் கிய்வில் உள்ள பெரிய குழந்தைகள் மருத்துவமனையைத் தாக்கியது.

பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கியுடன் பேசியமையுடன், தாக்குதலுக்குக் கண்டனம் தெரிவித்து, கனேடியர்கள் சார்பாக இரங்கல் தெரிவித்துள்ளார்.

திங்கள்கிழமை காலை அமெரிக்கத் தலைநகருக்கு வந்த பிறகு, 'இந்தத் தாக்குதல் அருவருப்பானது' என்று ட்ரூடோ ஓர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

'அப்பாவிக் குழந்தைகள் இருக்கும் மருத்துவமனையில் தாக்குதலை நியாயப்படுத்த முடியாது.' என அவர் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் குழந்தைகள் மருத்துவமனையைத் தாக்கிய ஏவுகணை, ஐந்து உக்ரேனிய நகரங்களை குறிவைத்து பகல் நேரத் தாக்குதலின் ஒரு பகுதியாகும்.

மருத்துவமனையில் 7 குழந்தைகள் உட்பட குறைந்தது 31 பேர் கொல்லப்பட்டுள்ளமையுடன், 154 பேர் காயமடைந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேட்டோ தலைவர்களின் உச்சி மாநாடு குறித்து ட்ரூடோவும் ஜெலென்ஸ்கியும் கருத்துகளை பரிமாறிக்கொண்டனர் எனப் பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரிட்டனின் புதிய வெளிவிவகார அமைச்சருடன் கனடா வெளிவிவகார அமைச்சர் சந்தித்து பேச்சு



ஒன்ராரியோ, ஜூலை 9

கடந்த வாரம் இங்கிலாந்தில் தொழிற்கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு முதல் முறையாக வெளிவிவகார அமைச்சர் மெலானி ஜோலி தனது புதிய இங்கிலாந்து பிரதிநிதியை நேற்றுச் சந்தித்தார்.

சமீபத்தில் இங்கிலாந்து வெளியுறவு, காமன்வெல்த் மற்றும் வளர்ச்சி விவகாரங்களுக்கான செயலாளராக டேவிட் லாம்மி நியமிக்கப்பட்ட பிறகு, லண்டனில் அவரைச் சந்திக்க அழைக்கப்பட்ட முதல் வெளியுறவு அமைச்சர் இவர் ஆவார்.

நாட்டின் அரசியல் பரப்பில் ஏற்பட்ட பாரிய மாற்றத்தினால், 14 ஆண்டுகால ஆட்சியின் பின்னர் கன்சர்வேடிவ் கட்சி அரசாங்கம் அகற்றப்பட்டது.

'முக்கிய கூட்டாளிகளுடன் மீண்டும் இணைப்பதன் மூலம், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பாதுகாப்பையும் செழிப்பையும் வழங்குவோம்' என அமைச்சர் ஜோலி தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் ஏற்பட்ட அரசியல் மாற்றம் கனடாவில் இங்கிலாந்துடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்திற்கான சில நம்பிக்கைகளைப் புதுப்பித்துள்ளது.

# சம்பந்தன் நினைவு அஞ்சலி நிகழ்வு டொரன்டோ நகரில் சனிக்கிழமை



ஒன்ராரியோ, ஜூலை 9

மறைந்த இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் நினைவு அஞ்சலி நிகழ்வு கனடாவின், டொரன்டோ நகரில் நடைபெறவுள்ளது.

திருகோணமலையின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தனது 91ஆவது வயதில் உடல்நலக் குறை காரணமாக ஜூன் 30ஆம் திகதி மரணமடைந்தார்.

இவரது நினைவை குறிக்கும் கண்ணீர் அஞ்சலி நிகழ்வு வரும் சனிக்கிழமை 13 ஆம் திகதி டொரன்டோவின், ஸ்கார்பரோ நகரில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

கனடா தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, கனடியத் தமிழர் பேரவையுடன் இணைந்து இந்த அஞ்சலி நிகழ்வுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

## பெருந்தலைவர் சம்பந்தன் அவர்களுக்குக் கண்ணீர் அஞ்சலி



Date: Saturday, July 13, 2024

Time: 4:30 - 8:00 pm

Venue: Malvern Family Resources Center
90 Littles Road, Scarborough (Sewells & Morningside)

திருகோணமலை மாவட்டத்தில் ஐந்துமுறை வென்ற மக்கள் பிரதிநிதி, இலங்கைத் தமிழரசு கட்சியின் மூத்த உறுப்பினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெருந்தலைவர், இலங்கை நாடாளுமன்றத்தில் மூன்றாண்டு காலம் ஆளுமை மிக்க எதிர்கட்சித் தலைவர், அரைநூற்றாண்டு காலமாக தமிழ் ஈழ அரசியலில் பேராளுமையாக விளங்கியவர் இராசவரோதயம் சம்பந்தன் ஐயா அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் பொதுக் கூட்டம்.

தேசத்தை நேசிப்போரின் அஞ்சலி உரைகள் இடம்பெறும்

கனடா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
647-763-9410 / 416-281-1165 / 416-998-2284

கனடிய தமிழர் பேரவை
416-240-0078 / 647-300-1973



# டொரன்டோ பெருநகரப் பகுதி இம்முறை மிக கூடிய வெப்பநிலையை அனுபவிக்கும்

ஒன்ராரியோ, ஜூலை 9

டொரன்டோ மற்றும் டொரன்டோ பெருநகரப் பகுதியானது இவ்வாண்டிற்கான மிக கூடிய வெப்பநிலையை அனுபவிக்கும் என வெப்ப எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் திங்கட்கிழமை முதல் பகல் நேர அதிகபட்ச வெப்பநிலை 31 பாகையை எட்டும் என்றும், ஈரப்ப தத்துடன் இணைந்து சில இடங்களில் 35 முதல் 38 வரை உணரப்படலாம் என்றும் சுற்றுச்சூழல் கனடா தெரிவித்துள்ளது.

குறைந்த அழுத்த அமைப்பு மேக மூட்டம் மற்றும் சில மழைப்பொழிவைக் கொண்டு வருவதால், குளிர்ந்த அல்லது புதிய காற்று செவ்வாய் அல்லது புதன் பிற்பகுதியில் திரும்பும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

பர்லிங்டன், ஓக்வில், ஹெமில்டன், மிசிசாகா, பிறம்டன், வோன், ரிச்மன்ட் ஹில் மற்றும் மாரக்கம் உள்ளிட்ட பல நகரங்களுக்கு இந்த எச்சரிக்கை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இந்த சூடான, ஈரப்பதமான வெப்பநிலை வயதானவர்கள், கைக்குழந்தைகள், இளம் குழந்தைகள், கர்ப்பிணிகள், உடல் அல்லது மனநோயால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் குறைபாடுகள் உள்ளவர்களுக்கு உடல்நல அபாயங்களை ஏற்படுத்துகிறது.

# வளர்ப்பு நாய் வைத்திருப்பதன் காரணமாக வாடகைக்கு வீடு பெற முடியாத இக்கட்டு!

கனடாவில் பெண் ஒருவர் வளர்க்கும் நாய் காரணமாக வாடகை வீடு ஒன்றை பெற்றுக் கொள்வதில் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றார்.

ஆட்டிசம் நோயினால் பாதிக்கப்பட்ட மகனுக்கு சேவைகளை வழங்கி வரும் நாயை, பல வீட்டு உரிமையாளர்கள் அனுமதிக்க மறுக்கின்றனர் என அவர் தெரிவிக்கின்றார்.

இதனால் தம்மால் வீடு ஒன்றை வாடகைக்கு அமர்த்திக் கொள்ள முடியாது நெருக்கடிகளை எதிர் நோக்க நேரிட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆறு மாதங்களாக புதிய வீடு ஒன்றை தேடி வருவதாக இசபெல்லா லீப்பிளாங்க் தெரிவித்துள்ளார்.

செல்ல பிராணிகளை வளர்த்து வரும் நபர்களுக்கு வீடுகள் வாடகைக்கு விடப்படுவது குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தனது மகன் ஆட்டிசம் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார் எனவும், மகனை சமாதானப்படுத்தவும் மகனுக்கு தேவையான சில உதவிகளை வழங்கவும் இந்த நாய் வளர்க்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான ஒரு பின்னணியில் நாய் இன்றி வீடு



ஒன்றில் குடியேற முடியாது என இசபெல்லா தெரிவித்துள்ளார்.

நாய்கள் அல்லது செல்லப் பிராணிகள் தொடர்பில் வீடுகள் வாடகைக்கு வழங்கப்படும் போது காணப்படும் சட்டங்கள் மறுசீரமைக்கப்பட வேண்டும் என வாடகைக் குடியிருப்பாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஐந்து வயதுக் குழந்தை விபத்தில் உயிரிழப்பு!

கனேடிய மாகாணமொன்றில், ஐந்து வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்ட விபத்தொன்றில், ஐந்து வயதுக் குழந்தை ஒன்று பலியான துயர சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளார்கள்.

கனடாவின்அல்பர்ட்டா மாகாணத்தில், சனிக்கிழமை மாலை, ட்ரக் ஒன்று பல வாகனங்கள் மீது மோதி பாரிய விபத்தொன்றை ஏற்படுத்தியுள்ளது. இந்த விபத்தில் ஐந்து வாகனங்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

விபத்தில் பலர் காயமடைந்துள்ள நிலையில்,அல்பர்ட்டாவைச் சேர்ந்த ஒரு தம்பதியின் ஐந்து வயதுக் குழந்தை ஒன்று பலியாகியுள்ளது. காயமடைந்தவர்கள் மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்கள்.

விபத்துத் தொடர்பாக தாங்கள் விசாரணை மேற்கொண்டுவருகின்றனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

